செ.வெ.எண் -40 நாள்:22.01.2018

**மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் குறித்த தெருமுனை விளக்க பிரச்சாரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.01.2018) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துவக்கி வைத்தார்கள்.**

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு தொடர்பான தெருமுனை விளக்க பிரச்சாரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப.,** அவர்களின் தலைமையில் இன்று (22.01.2018) துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 22.01.2018 பிற்பகல் 3.00 மணிக்கு திருமானூர் பேருந்து நிலையத்திலும், 23.01.2018 முற்பகல் 10.00 மணிக்கு ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்திலும், மதியம் 3.00 மணிக்கு செந்துறை பேருந்து நிலையத்திலும், 24.01.2018 முற்பகல் 10.00 மணிக்கு ஆன்டிமடம் பேருந்து நிலையத்திலும், பிற்பகல் 3.00 மணிக்கு தா.பழுர் பேருந்து நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்காணும் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு தொடர்பான தெருமுனை விளக்க பிரச்சாரத்தில் அனைத்து மாற்றுத் திறனாளிகளும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமிபிரியா, இ.ஆ.ப. அவர்கள்** தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலாஜி, மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.